# டான்செம் செய்தி மலர்
# TANCEM NEWS LETTER

TANCEM

மலர் - 1 அக்டோபர்-2009 இதழ் - 1



"உழைப்பால் உயர வேண்டும் என்ற ஓர் உயரிய தத்துவத்தை உள்ளத்திலே பதிய வைத்துக்கொண்டு வாழ்க்கையைத் தொடங்கினால், அந்த வாழ்க்கைப்பயணம் வலுவுள்ளதாகவும், பொலிவுள்ளதாகவும் மற்றவர்களுக்கு பயன்படும் வகையிலும் அமையும்"

- டாக்டர்.கலைஞர் மு.கருணாநிதி

## டான்செம் தலைவரின்
## வாழ்த்துச் செய்தி

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கழகத்தில் உள்ள ஆலைகளில் பல்வேறு தர வட்ட குழுக்களை (Quality Circles) ஏற்படுத்தி முழு உற்பத்தித் திறன் (TPM) மேன்மையுற எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எனது பாராட்டுகள். இது போன்ற முயற்சிகளுக்கு அனைவரது பங்களிப்பும் அவசியம். இது ஒரு தொடர் இயக்கமாக மாற வாழ்த்துகிறேன்.

"ஒரு மனிதன் வீதித் தூய்மை செய்யும் பணியில் உள்ளவரானாலும், அவர் மைக்கேல் ஆஞ்சலோவின் வண்ண ஓவியத்தைக் காட்டிலும் அல்லது பீத்தோவன் அமைத்த இசையைக் காட்டிலும் அல்லது சேக்ஸ்பியர் எழுதிய கவிதையைக் காட்டிலும் அழகுற வீதிகளை தூய்மை செய்திடல் வேண்டும். இப்படிப்பட்டவரை தேவதைகளும் பாராட்டும்" எனும் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கின் கூற்றிற்கிணங்க நாமும் பணியாற்ற உறுதி மேற்கொள்வோம்!

எம்.எப்.பாருகி
தலைவர் மற்றும் அரசு முதன்மை செயலாளர்
தொழில்துறை, தமிழ்நாடு அரசு.

## "முழுத்தரம் மற்றும் உற்பத்தி மேலாண்மை"

- கருத்தரங்கம்



A one day workshop on TQM and TPM for TANCEM at Lucas TVS was held at the factory premises recently. Rajaram, Managing Director of Tamil Nadu Cements Limited was the chief guest and delivered the inaugural address. N. Ravichandran, CEO of Lucas TVS gave a special address. Lucas TVS and Tancem workers participated in large numbers in the workshop.

22.8.2009 சனி அன்று "முழுத்தரம் மற்றும் உற்பத்தி மேலாண்மை" குறித்த கருத்தரங்கம் சென்னை பாடியிலுள்ள லூகாஸ் – டி.வி.எஸ். (Lucas TVS) நிறுவனத்தில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கழகத்தில் பணிபுரியும் 40 அலுவலர்களுக்கு நடத்தப்பட்டது. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் திரு.ரு. இராசாராம், இ.ஆ.ப. அவர்கள் முழுத்தர மேலாண்மை மற்றும் முழு உற்பத்தி மேலாண்மை குறித்த தேவையை வலியுறுத்தி உரையாற்றினார். லூகாஸ் டி.வி.எஸ் நிறுவனத்தின் **பின்வரும்** உயர் அலுவலர்கள் கருத்தரங்கத்தில் பங்கேற்று உரையாற்றினர். டாக்டர் திரு.என். இரவிச்சந்திரன், முதன்மை செயல் அலுவலர், திரு. டி.ஆர். உமாமகேஸ்வரன், முதுநிலை துணைத்தலைவர் இயக்கச் செயல்பாடுகள், திரு. எ. ஆராவமுதன், நிர்வாகத் துணைத் தலைவர் – மனிதவளம், திரு. ஆர். கோபால், மேலாளர் (உற்பத்திமுறை பொறியியல் துறை) திரு. என். விஜயகுமார், உதவி மேலாளர்(மக்கள் தொடர்பு–மனிதவள மேம்பாடு) மேலும் இதைத் தொடர்ந்து 29.8.2009 ஆம் தேதியன்று நமது ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் நமது மேலாண்மை இயக்குநர் அவர்களின் தலைமையில் "முழுத்தரம் மற்றும் உற்பத்தி மேலாண்மை" குறித்த ஒரு கருத்தரங்கம் துவக்கப்பட்டுள்ளது. இது நமது ஏனைய தொழிற்சாலைகளிலும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

## சிறக்கட்டும் தரவட்டம்! மறக்கட்டும் மன வாட்டம்!



29.8.2009 ஆம் தேதியன்று நமது ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் "முழுத்தரம் மற்றும் உற்பத்தி மேலாண்மை" குறித்த ஒரு கருத்தரங்கம் துவக்கப்பட்டுள்ளது

TANCEM

HINDU-27-8-2009

# Cements Corporation to go in for TQM

N. Anand

**CHENNAI:** In its endeavour to implement organisational improvement programmes such as Total Quality Management (TQM) and Total Productive Maintenance in its workplace, Tamil Nadu Cements Corporation (TANCEM) has tied up with Lucas-TVS and Anna University.

TANCEM chose Lucas-TVS as its partner, since the latter had improved its performance by the application of TQM and also secured the Deming Award. Lucas-TVS would impart its experience and knowledge to over 1,500 TANCEM employees, starting from the lower level to managing director. Anna University would provide the training. As a first step, a one-day workshop was conducted for 44 TANCEM officials last week, in which Lucas-TVS Managing Director T.K. Balaji offered the support of his team members. Through the Just In Time policy, it plans to eliminate waste, improve workers' efficiency, increase productivity andprolong life of plant and machinery among other things.

## உரிய நேர உற்பத்தி முறைக்கு முத்தான பத்து வித்துக்கள்

1. செயல்படுமுன் சிந்தனைசெய்க
2. நல்லதே நினைக்கவும்
3. எப்போதும் உயர்ந்த இலக்குடனே செயல்படுக
4. ஒரு பணியின் நல்ல தொடக்கம் பாதிப்பணி முடிந்ததற்கு சமம்
5. எப்போதும் புதிய எளிய செலவு குறைவான முறைகளை கையாள்க
6. தனி நபரின் சிந்தனையை விட ஒருமித்த சிந்தனையே சிறந்தது
7. பழைய உற்பத்தி முறைகளில் உள்ள குறைகளை களைக
8. செயல்படுதலும் மேற்பார்வையிடலும் இன்றியமையாதவை
9. சிக்கல்களைப் புரிந்து கொண்டு தீர்வு காண்க
10. புதுமைகளுக்கு எல்லைகள் இல்லை

1. Plan well before you act
2. Always think positively
3. Always aim at achieving higher goals
4. A job well-begun is half done
5. Always bring in new, simple and cost effective measures.
6. Collective wisdom is better than individual wisdom
7. Eliminate errors in old manufacturing methods
8. Supervision is as important as execution
9. Understand the problems and solve them
10. Innovation knows no limit



மாண்புமிகு தமிழக முதல்வர்

**டாக்டர் கலைஞர்** அவர்களின்

கருத்து மலர்

வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தால்
ஒவ்வொரு சாதாரண மனிதனுக்கும்,
ஒரு வரலாறு உண்டு. கடந்த கால
வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தால் தான்,
எதிர்கால முன்னேற்றத்திற்கு வழி கிடைக்கும்.



TANCEM

## நிறுவன / ஆலை பணியாளர்களுக்கு அன்பு வேண்டுகோள்!

தமிழக அரசின் முன்னோடி நிறுவனங்களில் ஒன்றாக இயங்கிவரும் டான்செம் நிறுவனத்தின் பணியாளர்களாகிய உங்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய உலகளவிலான நெருக்கடிகளிலும் நமது ஆலைகள் சிறப்பாக இயங்கிட உங்கள் ஒவ்வொருவரின் கடின உழைப்பும் அயராத முயற்சியும் மிக இன்றியமையாதவைகளாகும்.

டான்செம் நிர்வாகமும் உங்களது பல்வேறு கோரிக்கைகளை, நிதி நெருக்கடிகளிலும் இயன்ற அளவு ஏற்றுக் கொண்டு நிறைவேற்றி வருகின்றது. உங்களது தனிப்பட்ட குறைகளையும் அதற்கென ஏற்படுத்தியுள்ள குறைதீர்க்கும் வழி முறைகளின் படி நிறுவன / ஆலை விதிமுறைகளுக்குட்பட்டு நிவர்த்தி செய்து வருகின்றது.

ஆலை மேம்பாடு, நீண்ட காலக் கடன்களை நிறுவனத்தின் நிதி நிலைமைக்கேற்ப மாற்றியமைத்தல் போன்ற திட்டங்களுக்கு தமிழக அரசு அவ்வப்போது ஒப்புதல்கள் வழங்கி, நமது நிறுவனத்தின் வளர்ச்சியை ஊக்குவித்து வருகிறது. சுண்ணாம்புக்கல் பெறுவதற்கான சுரங்க குத்தகை அளிப்பதிலும் தமிழக அரசு இந்நிறுவனத்திற்கு முன்னுரிமை வழங்கியுள்ளது. பொதுத்துறை என்பது ஒரு புண்ணியத்துறை. எனவே, நலிவடைந்த நிறுவனம் என கண்டறியப்பட்டுள்ள நிலையிலிருந்து, இந்நிறுவனத்தை மீட்டெடுப்பது நம் அனைவரது கடமையாகும்.

இந்நிலையில், நமது நிறுவனத்தை தமிழ்நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களில் முன்னோடியாகவும் நவரத்தின நிறுவனமாகவும் கொண்டு வர உங்கள் உயர்ந்த உழைப்பையும், மனமார்ந்த முழு ஒத்துழைப்பையும் தொடர்ந்து நல்குமாறு, உங்கள் ஒவ்வொருவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மூ.இராசாராம்
மேலாண்மை இயக்குநர்

வெளியிடுவோர் : டான்செம் செய்திமலர் ஆசிரியர் குழு. திரு.கி.சாந்தகுமார் பொதுமேலாளர் (வணிகம்),
திரு.ப.பாலு துணை பொதுமேலாளர் (பணி மற்றும் நிர்வாகம்), திரு. Ja.R.கண்ணன் புரோகிராமர் அனலிஸ்ட்,
திரு.சி.சிவசங்கர் தேர்வுநிலை கண்காணிப்பாளர், டான்செம் நிறுவனம், சென்னை-02.
அச்சிடுவோர் : பாவை பிரிண்டர்ஸ்(பி)லிமிடெட், சென்னை-14.

(For Private Circulation Only)